**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.564/2009**
**Prosecution Witness :2**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : குருவம்மாள் | **Caste** | : | |
| **Husband's Name** | : கனேசன் | **Calling** | : | கூலி வேலை |
| **Village** | : விராலிப்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : நிலக்கோட்டை | **Age** | : | **59** |
| | | **Dated** | : | **01.07.2026** |

**01.07.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 **திருமதி.குருவம்மாள்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. U/s.355 of petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் நிலக்கோட்டை **விராலிப்பட்டியி**ல் குடியிருந்துக்கொண்டு, **கூலி வேலை** செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். எதிரிகளை தெரியும். திண்டுக்கல், நிலக்கோட்டை தாலுக்கா, விராலிப்பட்டி சர்வே எண்.113/2, 113/10 எண்களில் 3 ஏக்கர் 13 சென்டு எனது கணவர் வெங்கடசாமி என்பவரிடம் இருந்து ரூ.9000/-த்துக்கு கிரையம் பெற்றார். அதை நாங்கள் அனுபவித்து வந்தோம். அந்த நிலத்தை செல்வம் என்பவருக்கு விற்பனை செய்வதற்காக 2004ம் வருடம் பதிவு அலுவலகத்தில் வில்லங்கள் போட்டு பார்த்தோம். அதில் 2002ம் வருடும் 1ம் எதிரி நரசம்மா பெயரில் எனது கணவர் கிரையம் செய்ததாக கையொப்பம் இருந்தது.

எனது கணவர் யாருக்கும் கிரையம் செய்யவில்லை என சொன்னார். அதனால் நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். எனது கணவர் பெயரில் போலியாக எனது கணவரின் கையொப்பம், கைரேகையை வைத்து கிரையம் செய்துள்ளார்கள். மேலும், 3, 4 எதிரிகளுக்கு விற்பனை செய்துள்ளார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை</u>**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.07.01 01:49:44 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.564/2009**
**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சித்ரா | **Caste** | : |
| **Husband's Name** | : அசோக்குமார் | **Calling** | : வீட்டுக்குடித்தனம் |
| **Village** | : தாம்பரம் | **Religion** | : |
| **Taluk** | : சென்னை | **Age** | : **38** |
| | | **Dated** | : **01.07.2026** |

**01.07.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 **திருமதி.சித்ரா** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. U/s.355 of petition filed and allowed.**

<u>**முதல் விசாரணை**</u>

நான் சென்னை தாம்பரத்தில் குடியிருந்துக்கொண்டு, வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். திண்டுக்கல், நிலக்கோட்டை தாலுக்கா, விராலிப்பட்டி சர்வே எண்.113/2, 113/10 எண்களில் 3 ஏக்கர் 13 சென்டு எனது அப்பா வெங்கடசாமி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார். அதை நாங்கள் அனுபவித்து வந்தோம். அந்த நிலத்தை செல்வம் என்பவருக்கு விற்பனை செய்வதற்காக 2004ம் வருடம் பதிவு அலுவலகத்தில் வில்லங்கள் போட்டு பார்த்தோம். அதில் 2002ம் வருடும் 1ம் எதிரி நரசம்மா பெயரில் எனது அப்பா கிரையம் செய்ததாக கையொப்பம் இருந்தது. எனது அப்பா யாருக்கும் கிரையம் செய்யவில்லை என சொன்னார்.

அதனால் நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். எனது அப்பா பெயரில் போலியாக எனது அப்பாவின் கையொப்பத்தை போட்டு கிரையம் செய்துள்ளார்கள். மேலும், 3, 4 எதிரிகளுக்கு விற்பனை செய்துள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை</u>**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.07.01 01:49:50 +0530

Judicial Magistrate No.II
Dindigul.